செய்தி வெளியீடு எண்:523 நாள்: 10.08.2017

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்களை இன்று (10.8.2017) அவரது இல்லத்தில், மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்தால் சென்னையில் நடத்தப்படும் பொதுப் பேரவைக் கூட்டம் மற்றும் அகில இந்திய அளவில் சிறந்த கூட்டுறவு அமைப்புகளுக்கு விருதுகள் வழங்கும் விழாவில் கலந்து கொள்வதற்காக வருகை தந்துள்ள இந்தியாவின் அனைத்து மாநிலத்திலுள்ள மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிகளின் தலைவர்கள் மற்றும் மேலாண்மை இயக்குநர்கள் மரியாதை நிமித்தம் சந்தித்து வாழ்த்து பெற்றார்கள். அப்போது, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியால் தயாரிக்கப்பட்ட தகவல் தொகுப்பு புத்தகத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, அதன் முதல் பிரதியை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே. ராஜூ அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

இந்தியாவின் அனைத்து மாநிலத்திலுள்ள மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிகளை உறுப்பினர்களாகக் கொண்டு 1964ஆம் ஆண்டு மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையம் ஏற்படுத்தப்பட்டது. இவ்விணையத்தின் முக்கியப் பணி மாநிலக் கூட்டுறவு வங்கிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு தீர்வு களம் அமைத்துத் தருவதாகும். அத்துடன் இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் தேசிய வங்கியுடன் (நபார்டு) ஒருங்கிணைந்து மாநிலக் கூட்டுறவு வங்கிகளுக்கு உரிய வழிகாட்டுதல்களை வழங்குவதாகும்.

ஒவ்வொரு ஆண்டும், அகில இந்திய அளவில், சிறந்த கூட்டுறவு அமைப்புகளுக்கு விருதுகள் வழங்கி, பொதுப் பேரவைக் கூட்டம் இவ்விணையத்தால் நடத்தப்படும். இந்த விழா 2000–ஆம் ஆண்டிற்குப் பிறகு தமிழகத்தில் இன்றும் (10.8.2017), நாளையும் (11.8.2017) நடைபெறுகிறது. இந்த விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி ஏற்பாடு செய்துள்ளது.

இந்த விழாவில் கலந்து கொள்ள சென்னைக்கு வருகை தந்துள்ள இந்தியாவின் அனைத்து மாநிலத்திலுள்ள மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிகளின் தலைவர்கள் மற்றும் மேலாண்மை இயக்குநர்கள் இன்று (10.8.2017) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்களை, அவரது இல்லத்தில் மரியாதை

நிமித்தம் சந்தித்து வாழ்த்து பெற்றனர். அப்போது, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியால், தமிழ்நாட்டில் கூட்டுறவுகளின் செயல்பாடுகள் மற்றும் தமிழ்நாடு அரசின் நிதியுதவியுடன் கூட்டுறவுத் துறை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களை குறித்து விளக்கும், தகவல் தொகுப்பு புத்தகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் வெளியிட, அதன் முதல் பிரதியை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜு அவர்கள் பெற்றுக் கொண்டார்கள்.

இந்த விழாவில், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கிக்கும், இவ்வங்கியினால் நடத்தப்படும் விவசாயக் கூட்டுறவு பணியாளர் பயிற்சி நிலையத்திற்கும் அகில இந்திய அளவிலான பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வின் போது, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (பொறுப்பு) திருமதி சோ. மதுமதி, இ.ஆ.ப., தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் தலைவர் திரு.ஆர். இளங்கோவன், மாநிலக் கூட்டுறவு வங்கிகளின் தேசிய இணையத்தின் தலைவர் திரு.திலீப் சங்கானி மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.பி.சுப்ரமணியம், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் மேலாண்மை இயக்குநர் திரு. ஆர். கார்த்திகேயன் ஆகியோர் உடனிருந்தனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – **9.**
நாள் : 10.8.2017